
# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மலர் 2

ஜூன் 1994

கனி 11




ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் M.A.,A.Bs.,


## பரிசுத்த வேதாகமம்
## HOLY BIBLE

இவ்விதழை வாசிக்கும் சகோதரனே! சகோதரியே! கிறிஸ்தவ வேதாகமத்தைக் (HOLY BIBLE) குறித்து நீங்கள் கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா? அப்படியில்லையென்றால் இதைத் தொடர்ந்து வாசியுங்கள். பிசாசுக்கு செவிகொடுத்து விழ்ந்து போன மனிதனை மீட்டு தம்மோடு வைத்துக்கொள்ள வேண்டுமென்று தேவன் திட்டம் கொண்டு; தேவ மனிதர்கள் மூலம் அவருடைய வார்த்தைகளைக் கொடுத்து பரிசுத்த வேதாகமாக இன்று நமக்குக் கிடைக்குமபடி செய்திருக்கிறார். இவ்வேதாகமத்தை நீங்கள் நன்கு படித்து நம்தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்பட வேண்டும். அவர் ஒருவரையை நீங்கள் தொழுதுகொள்ள வேண்டும்

இவ்வுலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஒரு சில அனுபவங்கள் உண்டு. எது எப்படியிருந்தாலும் இந்த உலகத்திலிருந்து தேவனிடத்திற்குப் போக ஒரே வழி பரிசுத்த வேதாகமத்தில் தான் உள்ளது அதைக்கண்டு பிடிக்கிறவர்கள் பாக்கியவான்கள். உதாரணமாக இந்தியாவில் எங்கு நீங்கள் வாகனம் ஓட்டிச்சென்றாலும் இடது புறத்திலே ஓட்டிச்செல்ல வேண்டும். இது நமது தேசத்தின் சட்டமல்லவா! இது பற்றி தெரியாதஒரு நபர் நமது நாட்டில் வலது புறத்தில் வாகனம் ஓட்டினால் என்ன ஆகும்! மரணம் நேரிடுமல்லவா! அதுபோலவேதான் பரிசுத்தவேதாகமம் இவ்வுலகத்தில் வாழும் மனிதனுக்கு தேவன் கொடுத்தசட்டமாக இருக்கிறது இவ்வேதாகமத்தின் படி ஒருவன் நடக்காவிட்டால்வலது புறத்தில் வாகனம் ஓட்டியவன் நிலைமை தான் ஏற்படும். ஆகையால் தேவன் கொடுத்த வேதத்தைக் கைக்கொண்டு வாழ வேண்டும்.

இந்த பரிசுத்த வேதாகமத்தின் படி ஒருவன் நடந்தால் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான் என்று ஆண்டவர் இயேசு சொல்வதை யோவான் 10. 9ல் வாசிக்கமுடியும் ஆம் பிரிய மானவர்களே! வேதம் உங்களை எல்ல தீமையான காரியங்களிலிருந்தும் விடுவிக்கக் கூடியதாக இருக்கிறது. உங்களுடைய வாழ்க்கையில் சந்தோசம், சமாதானம் பெற்று வாழ வழிசெய்கிறது. பிசாசின் பிடியிலிருந்து உங்களை மீட்க வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை பற்றி தெரிந்து கொள்ள வழிசெய்கிறது. உங்கள் ஆத்துமா காக்சப்பட தொடர்ந்து புதையல்களைத் தேடுவது போல நீதிமொழிகள் 2:4ன் படி வேத வசனங்களைத் தேடி உங்களை நல்வழிப்படுத்துங்கள்

ஆண்டவராகிய இயேசு வருத்தப்பட்டு பராம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் மத் 11:28 என்றழைச்கும் ஆண்டவருக்கு உங்களை முற்றிலும் ஒப்புக்கொடுங்கள். அவர் உங்கள் பாரங்களை இலகுவாக்குவார் நீங்கள் கிறிஸ்துவுக்குள் சந்தோசமாக வாழ முடியும். பரிசுத்த வேதாகமம் உலகத்தில் எங்கும் அதிகமாக கிடைக்கும் ஒரே புத்தகம், சமாதானத்தைக் கொடுக்கும் புத்தகம் சந்தோசத்தைக் கொடுக்கும் புத்தகம், பயத்தை நீக்கும் புத்தகம் இருளிலுள்ளவர்களுக்கு வெளிச்சத்தைக்கொடுக்கும்புத்தகம், நித்திய ஜீவனுக்குள் வழிநடத்தும் புத்தகம், உங்களை நல்வழிப்படுத்தும் இந்த வேத புத்தகத்தை இன்றே பெற்று பயன்பெறுங்கள் ஆண்டவராகிய இயேசு உங்களை வழிநடத்துவாராக!

★ **சபை செய்திகள்:**

1. மே 11ம் தேதி வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் சுவிசேஷ பயணமாக கொடைக்கானல் சென்றனர். அங்குள்ள ஏரியில் சகோ அழகர் அவர்களும், சகோதரி சுப்பம்மாள் அவர்களும் கிறிஸ்துவுக்கு கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர் கோட்டை சகோ. குணசேகரன் குடும்பத்தார் இதற்கு உதவியாக இருந்து வழிநடத்தினார்கள்.

2. கர்த்தருக்கு சித்தமானால் ஜுன் மாதம் கீழ்கண்ட இடங்களில் குடும்ப ஜெபக்கூட்டங்கள் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 1. சகோ. நாகராஜன் இல்லம் | வத்தலக்குண்டு | 5. 6. 94 |
| 2. சகோதரி. சின்னத்தாய் இல்லம் | கணவாய்ப்பட்டி | 12. 6 94 |
| 3. சகோ. அர்ச்சுனன் இல்லம் | வத்தலக்குண்டு | 19. 6 94 |
| 4. சகோதரி பொன்னம்மாள் இல்லம் | கணவாய்ப்பட்டி | 26. 6. 94 |

நேரம்: ஞாயிற்று கிழமைகளில் மாலை 6. 30 மணிக்கு மேல் கலந்து கொண்டு பயன்பெறுங்கள்

அவர்கள் ...வீடுகள் தோறும அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, அப் 2: 49

**★மே மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:**

1. சகோ. டானியேல் தமிழ்வாணன் —மேல்விஷாரம்
2. ,, தயாளன் —கோயம்புத்தூர்
3. சகோதரி ஸ்டெல்லா —வத்தலக்குண்டு
4. ,, மேரி —வத்தலக்குண்டு
5. சிறுவர் ஜெயக்குமார் —புளியம்பட்டி
6. ,, கான்ஸ்டன்ட் —வத்தலக்குண்டு
7. சிறுமி. முனியம்மாள் —வத்தலக்குண்டு
8. ,, அனிதா — சொக்கலிங்கபுரம்

**★மே மாத இதழின் விடைகள்:**

1. அக்கினிக் கடலிலே வெளி 20:14
2. சுட்டெரிக்கப்படுவதே எபி 6:8
3. ஆவியினாலே பிலி3:3
4. கரைந்து நாகூ 1:5
5. மந்தையை எசேக்34:2
6. அல்ல
7. தீத்து
8. எபெனேசர்
9. கற்குவியல்
10. சாவை தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்

**★சிறுவர் வேத அறிவு போட்டி விடைகள்:**

| | | |
|---|---|---|
| 1. நீதிமான் | கலாத்தியர் | 3:11 |
| 2. சோர்ந்து போகாமல் | ... | 6:9 |
| 3. விசுவாசமே | ... | 5:6 |
| 4. சுவிசேஷம் | ... | 1:7 |
| 5. தமதுகுமாரனுடைய | ... | 4:6 |

**★இம்மாத வேத அறிவுப் போட்டி:**

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடைசி ஐந்திற்கு விடை மட்டும் வேதத்திலிருந்து இம்மாதம் 25ம் தேதிக்குள் எழுதி அனுப்புக.

1. அந்நிய தெய்வங்களை புதைத்து போட்ட தேவ மனிதன் யார்?
2. யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் எது நலம்?
3. இயேசுவுக்கு சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்தவன் யார்?
4. சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே என்ன உண்டாக வேண்டுமென்று கர்த்தருடைய கட்டளை
5. எப்போது பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்?

6 ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப் படாமலிருந்து என்ன செய்ய வேண்டும்?
7. பகலும் இரவும் ஓழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னவர் யார்?
8. புதையல்களை தேடுவது போல் எதை தேட வேண்டும்?
9. நாவில் சொல் பிறவாததற்கு முன்னே அதை அறிந்தவர் யார்?
10. ஊசா பெட்டியைப் பிடிக்க தன் கையை நீட்டியது சரியா? அல்லது தவறா?

## ★சிறுவர் வேத அறிவுப் போட்டி:

(எபேசியர் புத்தகத்திலிருந்து வசன ஆதாரத்துடன் நிரப்புக)

1 இயேசு கிறிஸ்துவுக்குள் கிறிஸ்துவின் — சமீபமானீர்கள்
2 மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல் — நல்மனதோடே ஊழியம் செய்யுங்கள்
3. கிறிஸ்து—தலையாயிருக்கிறது போல
4 சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் — பக்திவிருத்தி
5. பிசாசுக்கு — இருங்கள்.

## ஆண்டவர் இயேசுவை பார்க்க

"அவர் வருகிறார் என்று அந்த ஊருக்குள்ளே சொல்லப்பட்டது. ஆம்...மனிதருக்குள் வாழும் இயேசு,தேவனுடைய ஒரே பேரான குமாரன் வருகின்றார்!

அவர் நன்மை செய்கிறவராய் சுற்றி திரிந்தார்!

மக்கள் விடியற்காலை முதலே அவர் வரவேண்டிய அவ்வூர் பெரிய தெரு வழியே கூட்டம் கூட ஆரம்பித்தனர்.

மக்களின் கண்களில் ஆச்சரியமும் நம்பிக்கையும் நிறைந்தபார்வை நிரந்தர விடுதலைக்காக ஏங்கும் பல்வேறுபட்ட வியாதியஸ்தர்கள், சுகமளிக்கும் கரங்களைக் கண்டிட காத்திருந்தனர்!

குருடர்கள் வழியிலே...நின்று தேவனுடைய குமாரனே எங்களுக்கு இரங்கும் எனக் கூவி கொண்டிருந்தனர்.

"அவரின் வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொட்டால் போதும் என் தீராத வியாதி என்னை விட்டு நீங்கும்— பெரும்பாடுள்ள தாய்

அவருக்குள் ஒளி இருந்தது! அந்த ஒளி எந்த மனிதனையும் பிரகாசிக்கிறது மெய்யான ஒளி.

மக்கள் ஓர் புதிய வாழ்க்கையை
பரிசுத்த வாழ்க்கையை
அவருக்குள் தொடங்க காத்திருந்தனர்!

ஏனென்றால்,

அவரிடத்தில் சேருகிறவன் கைவிடப்படுவதில்லை!

அவர்—பாவத்தில் மாண்டு சீரழிந்து போன சிக்கலானவாழ்க்கைக்கு

தமது மரணத்தினால்,
தாம் சிந்திய இரத்தத்தினால்
தம்முடையபுதிய ஆவிக்குரிய இராஜ்ஜியத்தினால் மன்னிப்பளித்து,
நித்திய வாழ்வை அளிக்கின்றார்.
அவருடைய போதனைகள்:நொருங்கிச் சிதருண்டு போன
ஆத்துமாவுக்கு அருமருந்தாம்!
"இந்த இயேசு எப்படிப்பட்டவர்?
தன் உள்ளத்தைப் போலவே உடலிலும் குள்ளமான சகேயு என்ற மனிதனுக்கு ஆசை வந்தது! அவன் நீண்ட நாட்களாகவே தன் உண்மையான ஆத்துமாவைப் பற்றி அறியவும்—பாவத்திலிருந்து மீளும் வழி என்ன என்று ஆராயவும் ஆரம்பித்தான்

நல்ல வேளை அவர் வருகின்றார்
நான் எப்படி அவரை பார்ப்பது?
நான் குள்ளனாயிற்றே!
மக்கள் மத்தியிலே நான் போனதும்
பரிகாசிக்கப்படுவேனே!
ஒன்று செய்வேன்
யாரும் என்னைப் பார்க்க முடியாத
காட்டத்தி மரத்தில்;
அது— மரங்களிலே கைவிடப்பட்டது
பிரயோஜனமற்றது
பயன் படாதது!
அடர்த்தியானது!

ஆம்:அதிலே நான் ஏறி யாருக்கும் தெரியாத வண்ணம் அவரை கண்ணோக்குவேன். லூக்கா 19: 1—10

— செம்படவ ஞானி சாலொமோன்

## அன்பு— LOVE

1. தேவன் அன்பாகவே இருக்கிறார் 1யோ 4:8
2. ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கக் கடவோம் 1யோ 4:7
3. அன்போ சகல பாவங்களையும் மூடும் நீதி 10: 12
4. அன்பிலே பயமில்லை யோ 4: 18
5. அன்பினாலே ஒருவருக்கு ஒருவர் ஊழியம் செய்யுங்கள் கலா5:18
6. உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக... யாக் 2: 8
7 சகோதர சிநேகத்தோடஅன்பையும் கூட்டிவழங்குங்கள் 1பேது1:7
8 அன்பானது பிறனுக்கு பொல்லாங்கு செய்யாது ரோம 13-10
9. முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார் (இயேசு) யோ 13: 1

MONTHLY MAGAZINE
WORD OF CHRIST Regd No: 84661/92

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

10. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென். எபே 6:24.

---

Statement of ownership under section 5(2) of the press and registration of books, Act 1857

1. Place of Publication : 2-2-63 A/22 Kanavaipatti Road Batlagundu-624 202,

2. Periodicity of Publication: Monthly

3. Printer's, Publisher's & Editor's Name : B. ARJUNAN M.A.,
Nationality : Indian
Address : 2-2-63 A/22, Kanavaipatty Road, Batlagundu.

4. Name of the owner of the paper : B. ARJUNAN

I, B. ARJUNAN, here by declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated June 1994.

B. ARJUNAN
Publisher

★ இவ்விதழ் இலவசமாக அனுப்பப்படுகிறது ★

Ifundeliverd please return to

**THE EDITOR**
**WORD OF CHRIST**
**P. BOX No. 5**
**BATLAGUNDU.624202**
**S. INDIA**

---

Edited and published by B. Arjunan, M.A.,A.Bs., on bahal of church of christ, near water tank, Batlagundu-624202.
Printed by C. Pandiyarajan, B.Sc., at SHANTHI PRINTING PRESS, Main Road, Batlagundu-624202. India.